நாள் : 22-10-1991-ன்படி, இறந்துவிட்ட தொழிலாளர்களுக்கும் தரவேண்டும் என்று இருக்கிறது. எனவே, மீண்டும் இதைப் பரிசீலித்து பாதிக்கப்பட்ட அந்த 431 தொழிலாளர்களுக்கும் இந்தக் கருணைத் தொகை கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா ? ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தீபாவளியை முன்னிட்டு தமிழகத்தில் நலிந்து போய் இருக்கின்ற நிலையில் மூடிக்கிடக்கிற அனைத்து ஆலைகளின் தொழிற்சாலைகளின் பணியாளர்களுக்கும், கருணைத் தொகை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டது. ஏறத்தாழ 21 ஆயிரம் தொழிலாளர்களுக்கு இந்தக் கருணைத் தொகை வழங்கப்பட்டது. பி. அண்ட் சி. மில்லைச் சார்ந்த 8 ஆயிரம் பேர்களுக்கும், இன்னும் தமிழகத்திலே உள்ள அனைத்து ஆலைகளின் பணியாளர்களுக்கும் இந்தத் தொகை வழங்கப்பட்டது. அப்படியிருக்கும் போது, 430 பேர்களுக்கு கருணைத் தொகை வழங்கக்கூடாது என்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. நாங்கள், அதைப்பற்றி விசாரித்தபோது, இந்த 430 பேர்களும் ஓய்வு பெற்றுவிட்டார்கள் என்ற தகவல்தான் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கூறியது உண்மையானால், அதை ஆராய்ந்து அவர்களுக்கும் கருணைத் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 50, திருமதி ஏ. டி. சரஸ்வதி. மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

50—

தாளவாடி மின்நிலையம்.

*3448 திருமதி அ. தி. சரஸ்வதி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சத்தியமங்கலம் தொகுதி, தாளவாடி ஊராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ள மின்நிலையம் (Power House) அமைக்கும் திட்டம் எப்போது தொடங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியில் அமையவிருக்கும் 110/11 கிலோ வாட் துணை மின் நிலையம் எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு உள்ளது. இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி 1994-95 ஆம் ஆண்டு தொடங்கவிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1992 பிப்ரவரி 5]

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டுகால இருண்ட ஆட்சியில் நலிந்துபோன மலைவாழ் மக்களின் வாழ்க்கை முன்னேற, $1\frac{1}{2}$ கோடி ரூபாய்த் திட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காங்கேயத்திற்கு வருகை தந்த தினம், இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். அங்கு வாழும் மலைவாழ் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். வீதிகளில் விளக்கு வசதிகள் சரிவர இயக்கப்படவில்லை. இதனால், இந்தத் திட்டத்தை 1993 ஆம் ஆண்டிலாவது தொடங்க இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாளவாடியில் மின் சீரமைப்பிற்காக, உடனடியாக கஜவட்டி என்கிற இடத்திலே, 110/11 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம், 1992 ஆம் ஆண்டு நிறுவி இயக்க முடிவு எடுக்கப்பட்டு உள்ளது. அதன் மூலம் தற்போது அந்தப் பகுதியில் உள்ள மின் தடைகள், மின் கோளாறுகள், குறைந்த அழுத்தம் எல்லாம் சீர்செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர, 1995ஆம் ஆண்டு எடுக்க இருக்கிற திட்டத்திற்கு, வனப்பகுதியிலே அது செல்கின்ற காரணத்தினால், மத்திய அரசினுடைய அனுமதி பெறவேண்டியிருப்பதாலே, அதிலே சில சிக்கல்கள் இருக்கிற காரணத்தினாலேதான், இந்தத் திட்டம் 1994-95 -லே தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்த அனுமதி உடனடியாக மத்திய அரசிடமிருந்து கிடைத்தவுடன், அதற்கான முழு மூச்சுடன், புரட்சித் தலைவியினுடைய அரசு ஏற்பாடுகளைச் செய்து, அந்தத் திட்டமும் தொடங்கப்படும். தற்

முற்பகல் 10-15

போது தாளவாடி பகுதிக்கு, 1992ஆம் ஆண்டிலே கெஜவட்டியிலே தொடங்குகின்ற இந்த திட்டம் அந்தப் பகுதியினுடைய மின் திறனை அதிகப்படுத்தி அந்தப் பகுதியை மேம்பாடு செய்யும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 51, திரு. செ. பெருமாள். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

51—

கரியக்கோயில் நீர்த்தேக்க அணை.

*3989—திரு. செ. பெருமாள் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :